**செ. கு. எண்:077** **நாள்: 06.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.6.2017

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. தி. சுப்பிரமணி அவர்கள் உடல் நலக் குறைவால் **6.5.2017** அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், தில்லைநகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. A. சாமிகண்ணு அவர்கள் உடல் நலக் குறைவால் **6.5.2017** அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், செம்பியம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. வெ. பலராமன் அவர்கள் சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி **12.5.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ஆலங்குளம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. என். குருசாமி அவர்கள் உடல் நலக் குறைவால் **14.5.2017** அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்திகிரி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கே. நடராஜன் அவர்கள் நெஞ்சுவலி காரணமாக **19.5.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கே. செல்வராஜ் அவர்கள் பணியின் போது **24.5.2017** அன்று நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், தாடிகொம்பு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆர். ராஜசேகர் அவர்கள் மாரடைப்பால் **25.5.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தி. சுப்பிரமணி, தலைமைக் காவலர் திரு. A.சாமிகண்ணு, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு வெ.பலராமன், தலைமைக் காவலர் திரு. என்.குருசாமி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கே. நடராஜன், உதவி ஆய்வாளர் திரு. கே. செல்வராஜ் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆர். ராஜசேகர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட நிகழ்வுகளில் உயிரிழந்த 7 காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**